**சி.சி.எண்.33/2022 நாள்- 12.03.2024 பக்கம் 16/2023**

**அ.சா .1 சிவசுப்பிரமணியன் , த/பெ.மாரியப்பன்**

**எதிரிகள் ஆஜர் ஆஜரில்லை. பிரிவு 317 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.இ.படித்துள்ளேன். 2015 ம் ஆண்டு சேரன் பொறியியல் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தேன். எனக்கும், எதிரிகளுக்கும் சிவில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய அம்மாள் கோவிந்தம்மாள் என்பவர் ஒ.எஸ்.352/2015 என்ற வழக்கில் சக்திவேல், பெரியசாமி மகன் செல்வம், மணிகண்டன் , உதயகுமார் ஆகியோர்கள் மீது வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு நான் தோட்டக்குறிச்சியில் குடியிருந்தேன் என்றால் சரிதான்.

2) தினமும் கல்லூரிக்கு போய்விட்டு தினமும் வீடு வந்துவிடுவேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு கல்லூரி விடுவார்கள் என்றால் மாலை 5 மணிக்கு விடுவார்கள். தோட்டக்குறிசிச்சியிலிருந்து கல்லூரி சுமார் 30 கி.மீ. இருக்கும் என்றால் சுமார் 20 கி.மீ. தான் இருக்கும். அரை மணிநேரத்தில்சென்றுவிடலாம் என்றால், அரை மணி அல்லது முக்கால் மணி நேரத்தில் சென்றுவிடலாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மல்லாண்டான்கோவிலில் எப்போதும் மக்கள் அதிகமாக இருப்பார்கள் என்றால் சம்பவத்ததன்று 4,5 பேர் இருந்தார்கள்.

3) எங்களுடைய ஊர் மூப்பர் யார் என்றால் ஜெயபாலன் ஆவார். சம்பவம் நடந்த அன்று எனது சகோதரிகள் மற்றும் எனது அம்மா, மனைவி வீட்டில் இருந்தார்கள் என்றால் என்னுடைய மனைவி வெளியூரில் வேலை செய்து கொண்டிருந்தார், அம்மா மற்றும் எனது சகோதரிகள் வீட்டின் முன்பாக பேசிக்கொண்டிருந்தார்கள். அ.சா.4 நடேசன் மற்றும் 5.மாரியாயி எனது மாமா, அத்தை என்றால் சரிதான். அ.சா.2, மற்றும் 3 எனது சகோதரிகள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்பு நானும், என்னுடைய இரு சகோதரிகளும் ஒரே ஆம்புலன்ஸ்சில்தான் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான்.

நீதித்துறை நடுவர்,கூடுதல் மகளிர் நீதிமன்றம்,கரூர்

4) நேராக கரூர்அமராவதி மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். தோட்டக்குறிச்சியிலிருந்து கரூர் அமராவதி மருத்துவமனை சுமார் 14 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். மருத்துவரிடம் நான் தான் நடந்த சம்பவத்தை சொன்னேன் என்றால் சரிதான். முதலில் எனது அக்கா சிவகாமி என்பவருக்குத்தான் முதன் முதலாக சிகிச்சை அளித்தார்களா என்றால் இல்லை, எனக்கும், எனது அக்கா சிவகாமிக்கும் ஒன்றாகத்தான் சிகிச்சை அளித்தார்கள். மருத்துவமனையில் காவல்துறையினர் விசாரணை செய்தபோது நான்தான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான். நான் சொன்னதைத்தான் வாக்குமூலத்தில் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதை படித்துப் பார்த்துத்தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதா .

5) மருத்துவமனையில் விசாரணை செய்த பின்னிட்டு மறுபடியும் என்னை விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். சம்பவம் நடந்த அடுத்த நாள் எதிரிகளான பெரியசாமி மகன் செல்வம் மற்றும் மணிகண்டனை கைது செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் கொடுத்த புகாருக்கு பின்னிட்டுத்தான் எதிரியான பெரியசாமி மகன் செல்வம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் மறு விசாரணைக்கு உத்தரவு வாங்கிய பின்னிட்டுத்தான் பெரியசாமி மகன் செல்வம் இறந்தார்.

6) எதிரி பழனியம்மாள் சத்துணவு அமைப்பாளராக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது அக்கா உமாராணி திருமணம் செய்து திருமாநிலையூரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மற்றொரு அக்கா சிவகாமி என்னுடன்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். என்னை எதிரிகள் அடித்ததாக சொல்லப்படும் சமயத்தில் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தடுத்தார்களா என்றால் இல்லை, என்னுடைய அக்கா உமாராணி மற்றும் சிவகாமிதான் தடுத்தார்கள்.

7) என்னுடைய எனது இரண்டு அக்காவும் எதிரி மணிகண்டன் என்னை தடுத்து நிறுத்தியதாக சொன்னதற்கு பின்னிட்டு எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் நான் கேட்கும்போதே வந்துவிட்டார்கள். என்னை டி.எஸ்.பி. எங்கு வைத்து விசாரித்தார் என்றால் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னை மட்டும்தான் விசாரித்தார்களா என்றால் என்னுடைய அக்கா சிவகாமி மற்றும் உமாராணியையும் விசாரணை செய்தார்கள்.

8) பெரியசாமி மகன் செல்வம் இறந்ததற்கு பின்னிட்டுத்தான் தங்கவேல் மகன் செல்வம் தான் எதிரி என்றுசொல்லி மறு விசாரணைக்கு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தபோதே மணிகண்டன், பெரியசாமி மகன் செல்வம் ஆகியோர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வந்துவிட்டார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனக்குத் தெரியும் என்றும், அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குழி பறித்ததாக சொல்லப்படுவது எந்ததேதி என்றால் 06.07.2015 ஆகும். ஆனால் எதிரிகள் என்னை தாக்கியதாக சொல்லப்படும் தேதி 07.07.2015 மாலை 6 – 6.30 என்றால் சரிதான்.

9) மேற்படி விவசாய நிலம் என்னுடைய அம்மா பெயரில் உள்ளது என்றும், அது குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் 6.30 மணிக்கு தோட்டக்குறிச்சிக்கு வந்ததாக சொல்லப்படும் நிலையில் எவ்வளவு நேரம் சம்பவம் நடந்தது என்றால் அரை மணி நேரம் நடந்திருக்கும். அங்கிருந்து உடனே நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். பழனியம்மாள், சக்திவேல், செல்வம் ஆகியோர்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அவர்கள் மோகனூரில் பெரிய காரியத்திற்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல.

10) எனக்கும், எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருந்ததை மனதில் வைத்துக் கொண்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும், எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்தவிதமான ஆயுதங்களால் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/–R.Sujatha**
நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கரூர்

**சி.சி.எண்.33/2022 நாள்- 12.03.2024 பக்கம் 16/2023**

**அ.சா .2 சிவகாமி , த/பெ.மாரியப்பன்**

**எதிரிகள் ஆஜர் ஆஜரில்லை. பிரிவு 317 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்கும், சக்திவேல், செல்வம், மணிகண்டன் ஆகியோர்களுக்குமிடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 06.07.2015-ம் தேதியன்று எதிரிகள் குழி பறித்ததாக சொல்லப்படும் விவரத்தை என்னுடைய தம்பிக்கு எப்போது சொன்னேன் என்றால் அன்றே மாலை 6.30 மணியளவில் தகவல் சொன்னேன். அன்றைய தினம் என்னுடைய தம்பி வீட்டிற்கு வந்தாரா என்றால் இல்லை. என்னுடைய தம்பி வெண்ணெய்மலையில் குடியிருப்பதால் அன்றைய தினம் வரவில்லை, வெண்ணெய்மலையில் யாருடன் குடியிருந்து வருகிறார் என்றால் மனைவி மற்றும் மகளுடன் குடியிருந்து வருகிறார்.

2) 07.07.2015-ம் தேதியன்று எங்களது ஊர்மூப்பர் ஜெயபாலின் உறவினரின் பெரிய காரியம் மோகனூரில் நடந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சம்பவம் நடந்த உடன் யார் யார் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் நானும், எனது தம்பி சிவசுப்பிரமணியன், அக்கா ஊமாராணி சென்றோம். மூன்றுபேரும் ஒரே ஆம்புலன்சில்தான் சென்றோம் என்றால்சரிதான். மருத்துவமனையில் மருத்துவர் விவரம் கேட்டதை நான்தான் சொன்னேனா என்றால் என்னுடைய தம்பி சொன்னார். நான் மயக்கநிலையில் இருந்தேனா என்றால் இல்லை, கை வலியில் இருந்தேன்.

3) எதிரி மணிகண்டன் என் தம்பியை தடுத்து நிறுத்தி சண்டையிட்டதாக சொல்லப்படும் நேரத்தில்நான் வீட்டில் இருந்தேனா என்றால் இல்லை, வெளியில்நின்று பேசிக்கொண்டிருந்தேன். எனது அம்மா இருந்தாரா என்றால் அவரும் பேசிக்கொண்டிருந்தார். எனது வீட்டிற்கும், மல்லாண்டான்கோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீ. தூரம் இருக்கும். எங்கள் வீட்டிலிருந்து மல்லாண்டான்கோவில் நூலகம் நேரடியாக தெரியாது என்றால்

பார்த்தால் தெரியும். முனியப்பன் வீடு, வீரமணி வீடு ஆகியோர்களின் வீட்டை தாண்டித்தான் நூலகம் உள்ளது என்றால் சரிதான். பார்த்தால் தெரியும்.

4) நூலகம் என் வீட்டிலிருந்து பார்த்தால் தெரியும் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது தம்பியும் எத்தனை நாட்களில் டிஸ்சார்ஜ் ஆனோம் என்றால் 15.07.2015-ம் தேதி டிஸ்சார்ஜ் ஆனோம். வழக்கு பதிவு செய்தபோதே மணிகண்டன், பெரியசாமி மகன் செல்வம் இருவரையும் போலீசார் கைது செய்தார்கள் என்றால் சரிதான். ஆனால் என்னையும், என் தம்பியையும் அடித்தது தங்கவேல் மகன் செல்வம். பெரியசாமி மகன் செல்வத்தை வழக்கில் சம்மந்தம் இல்லை என முதல்விசாரணைக்கு வரும் வரை தெரியாது என்றால் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தங்கவேல் மகன் செல்வத்திற்கு பதிலாக பெரியசாமி மகன் செல்வம் கைதான விவரம் தெரியும்.

5) எனக்கு எதிரிகள் அடித்ததில் இரத்த காயம் ஏதேனும் ஏற்பட்டதா என்றால் இல்லை, கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. சம்பவ சமயத்தில் ஊர்க்காரர்கள் எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்றால் 5,6 பேர் இருந்திருப்பார்கள். அவர்களுக்கும், சம்பவம் நடந்த விவரம் தெரியும் என்றால் தெரியும். எனக்கு கையில் ஏற்பட்ட காயத்தை தவிர வேறு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரிகள் என்னை அடிக்கவும் இல்லை என்றாலும், எதிரிகளுடன் உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் சமயத்தில்எதிரிகள் மோகனூருக்கு பெரியகாரியத்திற்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல, எதிரிகளுக்கும், எனக்கு வேறு விதத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் அடித்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/–R.Sujatha**
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,கரூர்

**சி.சி.எண்.33/2022      நாள்- 12.03.2024    பக்கம்  16/2023**

**அ.சா .3 உமாராணி , க/பெ.முனியப்பன்**

**எதிரிகள் ஆஜர் ஆஜரில்லை. பிரிவு 317 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் திருமணம் ஆகி கரூரில் உள்ள திருமாநிலையூரில் வசித்து வருகிறேன் என்றால்சரிதான். 06.07.2015-ம் தேதியன்று குழி பறித்ததாக சொல்லப்படும் விவரத்தை யார் எனக்கு சொன்னார்கள் என்றால் யாரும் சொல்லவில்லை, நான் என்னுடைய அம்மாவைப் பார்ப்பதற்காக 07.07.2015-ம் தேதி வந்திருந்தேன். எனது தம்பி சிவசுப்பிரமணியத்திற்கு திருமணம் ஆகி குடும்பத்துடன் எங்கு குடியிருந்தார்என்றால், வெண்ணெய்மலையில் குடியிருந்து வருகிறார்.

2) தினமும் தோட்டக்குறிச்சிக்கு எனது தம்பி வரமாட்டார் என்றால் சரியல்ல. எங்களுக்கும், சக்திவேல், செல்வம், மணிகண்டன் ஆகியோர்களுக்குமிடயே எனது அம்மாவின் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். சண்டைபோட்டு 10 நிமிடம் கழித்து மல்லாண்டான்கோவிலுக்கு சென்றிருப்பேனா என்றால் சென்றிருப்பேன். நான் அங்கு சென்றபோது ஊர்க்காரர்கள் அங்கு இருந்தார்களா என்றால் 4, 5 பேர் இருந்தார்கள். எங்கள் வீட்டிற்கும், மல்லாண்டான்கோவிலுக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர்துாரம் இருக்கும்.

3) எங்களுடைய வீட்டிற்கும், மல்லாண்டான்கோவிலுக்கும் செல்லவேண்டும் என்றால் மாரிமுத்து, வீரமணி, மனோகரன் ஆகியோர்களது வீட்டை தாண்டித்தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அதனால் எங்களுடைய வீட்டிலிருந்து மல்லாண்டான்கோவில் தெரியாது என்றால் தெரியும். நான் போகும்போதே எனது அத்தை மாரியாயி, மாமா நடேசன் ஆகியோர்கள் உடன் வந்தார்களா என்றால் சத்தம் கேட்டு வந்துவிட்டார்கள்.

நீதித்துறை நடுவர்,கூடுதல் மகளிர் நீதிமன்றம்,கரூர்

எவ்வளவு நேரம் சம்பவம் நடந்திருக்கும் என்றால் கால்மணி நேரம் நடந்திருக்கும்.

4) அதற்கு பின்னிட்டு நாங்கள் மூன்று பேரும் ஒரே ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் மூவரும் நன்றாக பேசக்கூடிய நிலையில்தான் இருந்தோம் என்றால் சரிதான். மருத்துவரிடம் சம்பவம் நடந்த விவரத்தை நான்தான் சொன்னேன் என்றால் ஆமாம். எங்களுடைய ஊர் மூப்பர் ஜெயபால் என்பவரை தெரியுமா என்றால்தெரியும். அன்றைய தினம் அவரது உறவினர் மோகனூரில் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

5) சக்திவேல், அவரது மனைவி பழனியம்மாள், செல்வம் ஆகியோர்கள் என்னை அடித்ததாக சொல்லப்படும் சமயத்தில் அவர்கள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் இருந்திருந்தால் மருத்துவரிடம் சொல்லும்போது சரியான நேரம், காயம் ஆயுதங்களை குறிப்பிட்டு சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல. எனக்குவேறு வகையில் ஏற்பட்ட காயத்தை வைத்துக் கொண்டு எதிரிகள் அடித்ததால்தான் காயம் ஏற்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 08.07.2015-ம் ஆண்டு விசாரணை செய்தார்கள், அதன் பின்னிட்டு விசாரித்தார்களா என்றால் இல்லை.நான் சொன்னது போல் என்னை எதிரிகள் எந்த ஆயுதத்தால் தாக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/–R.Sujatha**
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,கரூர்